1972 சனவரி 29]

அவர்களுடைய அருமை பெருமைகளும் கிடைக்கப்பெற்றன. இவையெல்லாம் தென்னிந்திய வரலாறு எழுதுவதற்கு மிகவும் பயன்படும் என்ற காரணத்தால், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் இதில் மிக்க கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்

* 123 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வளர்ச்சி வட்டாரங்களின் எல்லைகளை மீண்டும் வரையறுத்தல் பற்றிய பிரச்சினையை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பரப்பளவில் பெரியதாக இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கூட்டத்திற்கு வர வேண்டுமென்றால் முப்பது மைல்கள் கடந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1958-59-ல் ஊராட்சி ஒன்றியங்கள் பிரித்த நேரத்தில் மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. மொத்தம் 375-ல் ஒரு ஊராட்சி ஒன்றியம் தகராறில் இருக்கிற காரணத்தால் 374 ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது செயல் படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் பல ஊராட்சி மன்றங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதால் சில சங்கடங்கள் வருகின்றன. அரசாங்கத்தின் நிர்வாகச் செலவும் அதிகமாகும். இவற்றையெல்லாம் அரசு ஆராய்ந்தாக வேண்டும். அப்படி இரண்டாகப் பிரிப்பதனால் நிர்வாகத்தை சீராக்க முடியுமா? அதனால் மக்களுக்கு நன்மை விளையுமா என்பதையெல்லாம் பரிசிலனை செய்து பார்க்க வேண்டும். சில ஊராட்சி ஒன்றியங்கள் நீண்டு வளைந்து இருக்கின்றன. பரப்பளவு பெரியதாகவும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் எல்லா இடங்களிலும் சீராக நடைபெற முடியாமல் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசிலனை செய்ய வேண்டும். ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு காலதாமதமாகிறது என்று குறிப்பிட்டார். பிரிப்பதனால் சில சங்கடங்கள் வரக்கூடும். பிரிக்காதிருக்கும் நிலையில் தான் தலைவனாக வர முடியும், பிரித்தால் தான் தலைவராக வரமுடியாது என்று சிலர் நினைக்கக்கூடும்.

ஆகவே, சில பல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தால் பலன் பெறுமா என்பதை யோசித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Government Mental Hospital at Kilpauk

* 124 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Public Health be pleased to state—

(a) Whether there is any proposal to celebrate the Centenary of the Kilpauk Government Mental Hospital; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சென்னையிலுள்ள அரசு மனநல மருத்துவமனையின் நூற்றாண்டு விழா 12—9—1971-லிருந்து 23—9—1971 வரை கொண்டாடப்பட்டது. அவ்விழாவையொட்டி அரசு மனநல மருத்துவமனையில் 18—9—1971-லிருந்து 23—9—1971 வரை ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது.

* 125 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the total number of in-patients now being treated at the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை அரசு மனநல மருத்துவமனையில் 19—10—1971-ம் நாள் நிலைரப்படி உள்ளிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,725.

X-ray films for Government Hospitals in Madras

* 126 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether X-Ray films are being purchased from Messrs Hindustan Photo Films, a Union Government undertaking, by the Madras City Government Hospitals.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம். சில அளவுள்ளவை அவர்களின் முக்கிய வினியோகஸ்தர்களாகிய எக்ஸ்ரே அண்டு அலைடு பிராடெக்ஸ் இடமிருந்து வாங்கப்படுகின்றன.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலே இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் எக்ஸ்ரே பிலிம்ஸ் தரம் உள்ளவைதானா? வெளிநாடுகளிலிருந்து வருகின்றவை போன்று அவை தரமுள்ளவையாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அவை பயன்படுத்தப்பட்டு தரமுள்ளவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அவை எந்த எந்த அளவு உள்ளவையாக தயாரிக்கப்